# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.131/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.த.சா . | : | 1 | நாள் | : | 17.03.2025 |
| பெயர் | : | ஆதிநாராயணன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of March 2025.

எதிரிகள் ஆஜர்.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாலைமுரசு பத்திரிக்கையில் எடிட்டராக பணிபுரிந்து வருகிறேன். அது மாலைச் செய்தி வழங்கும் நாளிதழ் ஆகும். மாலை முரசு செய்தித்தாள் நிறுவனம் தினத்தந்தி குழுமத்தின் ஒரு அங்கம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 2014ம் ஆண்டு முதல் மாலை முரசு நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் செய்தித்தாளுக்கு செய்தி சேகரிப்பதற்காக மாவட்டத்தில் பல இடங்களிலும் நிருபர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எங்கள் செய்தித்தாளுக்கு அச்சிடும் நிறுவனம் வண்ணாரப்பேட்டையில் எங்கள் அலுவலகத்தில் உள்ள அச்சகத்தில் அச்சிடப்படும்.

எங்கள் நிருபர்கள் சேகரிக்கும் செய்திகள் நேரடியாக எங்கள் அலுவலகத்திற்கும் எங்கள் அலுவலகம் அமைந்துள்ள மதுரைக்கும் அனுப்பி வைப்பார்கள் என்றால் சரிதான். நிருபர்கள் அனுப்பும் செய்திகளை வடிவமைத்து அச்சுக்கு அனுப்புவது எடிட்டோரிய பிரிவின் பணியாகும். அதன் கூட்டுப்பொறுப்பு எனக்கு உண்டு. மாலை முரசு தமிழகத்தின் தலைசிறந்த மாலைச் செய்தி நிறுவனத்தில் ஒன்று ஆகும். அரசு அலுவலகங்களுக்கும் காவல் நிலையத்திற்கும் எங்கள் செய்தித்தாள் அனுப்பி வைக்கப்படும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 07.01.2010 ம் தேதியிட்ட நாளிதழில் தலைப்புச் செய்தியாக "அம்பையில் இன்று பயங்கரம், சப் இன்ஸ்பெக்டர் குண்டு வீசி கொலை, மணல் கடத்தல் கும்பல் வெறிச்செயல் என தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது" (மேற்கண்ட கேள்வியை அரசு தரப்பில் குறியீடு செய்யப்படாத ஆவணமான செய்தித்தாளின் அடிப்படையில் கேள்வி கேட்க இயலாது என்று ஆட்சேபிக்கப்பட்டு கேள்வி அனுமதிக்கப்பட்டது). நான் 2014 ம் ஆண்டிலிருந்துதான் தலைமை செய்தி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக எங்கள் செய்தித்தாளில் ஏதேனும் ஒரு செய்தி தவறாக வெளியிடப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் அதை சுட்டிக்காட்டும்போது அதற்கு வருத்தமும், திருத்தமும் செய்து நாளிதழில் செய்தி வெளியிடுவோம்.

<u>**மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி. இல்லை**</u>

**அரசு தரப்பு வழக்கறிஞர் கு.வி.**

நான் 2014 ம் ஆண்டிலிருந்துதான் தலைமை செய்தி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் சொந்த விவசாயம் செய்து வந்தேன். 2014 ம் ஆண்டுக்கு முன்பு மாலை முரசு செய்தித்தாள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட செய்தித்தாளில் தலைப்புச் செய்தியை பற்றி கேட்டதால் நான் அதை வாசித்துக் காட்டினேன். அதுபற்றி எனக்கு நேரில் தெரியாது. நெல்லை மாலை முரசு என்ற எங்கள் நிறுவனம் 10.03.2014 ல் துவக்கப்பட்டதாகும். எனவே என்னிடம் காட்டப்பட்ட 07.01.2010 ம் தேதியிட்ட செய்தித்தாள் பற்றி என்னால் கூற இயலாது.

**மறுவிசாரணை**

10.03.2014 முதல் எங்கள் நிறுவனத்தில் அச்சிடப்பட்ட செய்தித்தாள்கள் கோப்பகத்தில் கோர்வை செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இராமசந்திர ஆதித்தன் என்பவரின் மகன் கண்ணன் எங்கள் நிறுவனத்தின் இயக்குநர் ஆவார். 2014 ம் ஆண்டு எங்கள் நிறுவனம் தொடங்கும் முன்பே மாலை முரசு என்ற செய்தித்தாள் இயங்கி வருகிறது.

**மீண்டும் குறுக்கு விசாரணை**

முந்தைய மாலை முரசு நிறுவனத்திற்கும் 2014 ம் ஆண்டு துவக்கப்பட்ட எங்கள் நிறுவனத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.17 16:23:59 +0530